1987 நவம்பர் 12]

லாம் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக பகிர்மானக் குழாய்கள் பதிப்பதில் நிறைய காலதாமதம் ஏற்பட்டது. ஆக எல்லாவற்றி லும் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் தொடர்ச்சியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு திருச்சி நகர் முழுவதற்குமாக இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நல்லபடியாக உருவாக்க ஏற் பாடுகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. உச்ச கட்டமாக 2001-ஆம் ஆண்டில் 6 இலட்சம் மக்கள் அங்கே இருப் பார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கான மக்கள் தொகைக்குப் பயன்படுகிற வகையில் இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது.

சிறுவாக்கம் கிராமத்தில் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி.

64—(*வினா எண். 9022)—**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உத்தரமேரூர் தொகுதியில் வாலாஜாபாத் யூனியனில் சிறுவாக்கம் என்ற கிராமத்திற்கு தன்னிறைவு திட்டத்தால் குடி தண்ணீர் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை கடந்த மூன்று வருடங்களாக கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இக்குடிநீர்த்தொட்டியின் கட்டுமானப் பணிகள் அனைத்தும் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிக்கப்பெற்று குடிநீர்த்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய உத்தரவின் அடிப்படையில் என் னுடைய தொகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள்.

65—(*வினா எண், 11979)—**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள் கிடைப் பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

[1987 நவம்பர் 12

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறைக்கு அருகில் திருமங்கலம் கிராமத்தில் பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தரைமட்டத்திலிருந்து 300 மீ. ஆழத்தில் பழுப்பு நிலக்கரி 12 முதல் 16மீ. அளவிற்கு படிந்து காணப்படுகிறது. மேலும் இப்பழுப்பு நிலக்கரி படிவம் 300 மீட்டர் ஆழத்தில் உள்ளதால் சுரங்கப் பணி செய்து வெட்டியெடுக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை அணுகி, அங்கே ஒரு நிலக்கரி சுரங்கத்தை ஏற்படுத்துகிற வகையில் அதாவது அங்கே கிடைக்கிற நிலக்கரி நல்ல நிலக்கரியாக இருப்பதால் அதனைப் பயன்படுத்துவதற்கு உரிய வகையில் மத்திய அரசை வற்புறுத்த மாநில அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே காணப்படுவது பழுப்பு நிலக்கரிதான்; நல்ல நிலக்கரி என்று சொல்ல முடியாது. பௌதிக ஆய்வு செய்து முடிவெடுத்திருக்கிறார்கள். மேலும் அது ரொம்ப ஆழத்தில் இருக்கிறது. எனவே அங்கே சுரங்கம் அமைத்து வெட்டி எடுப்பது பொருளாதார அடிப்படையில் சரியாக இருக்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. பொருளாதார அடிப்படையில் கட்டுப்படியாகக்கூடிய நிலைமை இருந்தால்தான் அங்கே நிலக்கரி எடுப்பதைப் பற்றி முடிவு செய்ய முடியும். இது குறித்து புவியியல் துறை ஆய்ந்து அரசுக்கு முடிவினை அறிவிக்கும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் கிடைக்கிற நிலக்கரியை விட உயர்ந்த ரகம் என்றும் நெய்வேலியை விட மேலேயே கிடைப்பதாகவும் நான் ஒரு கட்டுரையில் படித்தேன். 'இந்து' பத்திரிகையில் எழுதி இருந்தார்கள். எனவே அரசாங்கம் அதைப் பரிசீலித்து நல்ல நிலக்கரியாக இருப்பதாலும், நெய்வேலியை விட மேலேயே அதிகமாகக் கிடைப்பதாலும் அதனை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா ? அதனால் தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு ஏற்படுவதோடு துணைத் தொழில்களும் உருவாவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி விரைவில் இந்தத் திட்டத்தைக் கொணர முயற்சி எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலே கிடைக்கிற நிலக்கரியை விட ரொம்ப ஆழத்தில் இருக்கிறது. 300 மீட்டர்

1987 நவம்பர் 12]

ஆழத்தில் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே அவ்வளவு ஆழத்தில் உள்ளதை எடுப்பது என்றால் சுரங்கம்தான் தோண்ட வேண்டும். ஆனால் நெய்வேலியில் இருப்பது திறந்த வெளி சுரங்கம். அதை எடுப்பது சுலபம். இது கடினம், விலையும் கட்டுப்படியாக வேண்டும். மேலும் இந்தியாவிலே பல்வேறு பகுதிகளிலே நிலக்கரி கிடைக்கிறது. எனவே விலை கட்டுப் படியாகக்கூடிய நிலைமை இருந்தால் இதை எடுப்பது பற்றி மீண்டும் ஆலோசிக்கலாம். மத்திய அரசினிடத்திலே இப்போது எந்த உதவியும் கோருவது ஒன்றும் பயன்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிடும் போது 300 மீட்டருக்கும் கீழே இருப்பதனால், அதிக ஆழத்தில் இருப்பதனால் அதிகமான செலவு பிடிக்கும் கட்டுப் படியாகாது என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கரியை எடுப்பதற்கு ஆகக் கூடிய செலவை மட்டும் வைத்து லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல், அந்தக் கரியினால் ஏற்படக் கூடிய மற்றைய விளைவுகளையும் சேர்த்து வைத்து ஒட்டு மொத்தமாகப் பார்த்து, தமிழ்நாட்டினுடைய நலன் கருதி அந்த திட்டத்தை மீண்டும் எடுத்துக் கொள்ள அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே பூராவையும் நஷ்டத் திலே நடத்திக் கொண்டிருக்க முடியாது.

பைங்குளம் குடி தண்ணீர் திட்டம்.

66—(*வினா எண் 12391)—டாக்டர் சே. குமாரதாஸ்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா வில் உள்ள பைங்குளம் குடி தண்ணீர் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் உள்ள பைங்குளம் கிராமப் பேரூராட்சி மற்றும் வழியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ரூ. 37 இலட்சங்கள் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத் தின் பரிசீலனையில் உள்ளது.